பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (நா.ந.ப) செயல்முறைகள், சென்னை – 06.

ந.க.எண்.036861/ எம்/இ2/2022, நாள். 22.09.2022.

பொருள்: பள்ளிக்கல்வி– 2022 அக்டோபர், 02 அன்று மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளினை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்புவரை தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவ/மாணவியர்களிடையே பேச்சுப்போட்டி, கட்ரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்துதல் – வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்கள் அனுப்பக் கோருதல் – தொடர்பாக .

பார்வை: சென்னை–9, தலைமைச்செயலகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(விழா) துறை கடிதம் எண்:16089/ விழா/2022–2, நாள்:19.09.202022.

******

பார்வையில் காணும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(விழா) துறை கடிதத்திற்கிணங்க எதிர்வரும் 02.10.2022 அன்று மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளினை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவ/மாணவியர்களிடையே பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளை நடத்தி முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரத்தினை அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளினை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளின் தமிழ் வழியில் கல்வி பயிலும் 6 முதல் 8 ஆம் வகுப்பு , 9, 10 ஆம் வகுப்பு மற்றும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளின்படி பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டியினை நடத்தி ஒவ்வொரு போட்டியிலிருந்தும் தலா 9 மாணவர்கள் வீதம் மொத்தம் 27 மாணவ / மாணவியர்களை தெரிவு செய்து அவர்களின் பெயர் பட்டியல் விவரத்தினை புகைப்படத்துடன் 26.09.2022 அன்று காலை 11.00 மணிக்குள் இவ்வாணையரகத்தில் நேரில் ஒப்படைக்குமாறு சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**இணைப்பு :** பார்வையில் காணும் கடித நகல் மற்றும் பேச்சுப்போட்டி, கட்ரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளுக்கான தலைப்பு சார்பான விவரம்.

(ஒம்,)//

**இணை இயக்குநர் (நா.ந.ப)**

**பள்ளிக் கல்வி**

**பெறுநர் :** – மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர். சென்னை

**நகல்**

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(விழா) துறை ,
   தலைமைச் செயலகம், சென்னை–09. (தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது)
2. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக் கல்வித் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை–09. (தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது).

பள்ளிக் கல்வித்துறை

சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் தமிழ் வழிப்பயிலும் 6 முதல் 8ஆம் வகுப்பு, 9முதல் 10ஆம் வகுப்பு மற்றும் 11 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர் இடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப்போட்டி நடத்தி தலா மூன்று நபர்கள் வீதம் 27 மாணவ-மாணவியரை தேர்வு செய்திடல் வேண்டும்.

பேச்சுப்போட்டி தலைப்பு :-

1. இந்திய வளர்ச்சியும் காந்திய வழிகாட்டலும்
2. காந்தியமே இளைஞர்களின் நம்பிக்கை
3. அறவழி வெற்றியே அறுதி வெற்றி - அகிம்சையே மகா சக்தி

கட்டுரைப் போட்டி தலைப்பு :-

1. மாற்று இல்லா மத நல்லிணக்கம்
2. உலக அமைதிக்கு காந்தியப் பயிற்சிகள்
3. தீவிரவாதம் ஒழிப்போம் - தேசம் காப்போம்

ஓவியப்போட்டி தலைப்பு :-

1. காந்தியடிகளின் கொள்கையும் கோட்பாடும்
2. தமிழகத்தில் காந்தியடிகள்
3. காந்தியடிகளின் சமூக சிந்தனை

குறிப்பு : -

மேற்குறிப்பிட்ட போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ, மாணவியர்களின் பெயர் பட்டியல் விபரத்தை புகைப்படத்துடன், 26.09.2022க்குள் இணை இயக்குநர் (நினைவகங்கள்), செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், 9வது தளம், சென்னை-9 என்ற முகவரிக்கு நேரில் வந்து வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளபடுகிறது.